ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2334/41 - 2023 ජූනි මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.06.01
*2334/41 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 277/40* (iv)

***(188 ஆம் அத்தியாயமான) புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டம்***

*18 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*(188 ஆம் அத்தியாயமான) புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை "பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்" ஆக இருக்க வேண்டும் என இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் இக்கட்டளையின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் தொடர்பிலான அறிவித்தல் 2022, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 2299/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.*

**விதுர விக்ரமநாயக்க,**
*புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.*

கொழும்பு,
*2023, மே 08.*

1A – G 39626 – 07 (2023/06)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக வெளிப்படுத்தப்பட்ட சின்னங்களின் பட்டியல்

**சப்ரகமுவ மாகாணம்**

01. சப்ரகமுவ மாகாணத்தின், இரத்தினபுரி மாவட்டத்தில், ஓப்பநாயக்க பிரதேச செயலாளர் பிரிவில், பொல்வத்தஹேன கிராம அலுவலர் பிரிவிலுள்ள பொல்வத்தஹேன கிராமத்தில் அமைந்துள்ள கெசெல்வத்த ஸ்ரீ கதலிவனாராம விகாரை வளவினுள் உள்ள பழைமையான விகாரைக் கூடம்.

02. சப்ரகமுவ மாகாணத்தின், இரத்தினபுரி மாவட்டத்தில், கொடக்கவெல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 599, எமிட்டியகொட கிராம அலுவலர் பிரிவிலுள்ள எமிட்டியகொடயில் வளவ்வத்த என அழைக்கப்படுகின்ற இடத்தில் அமைந்துள்ள எமிட்டியகொட வளவு.

03. சப்ரகமுவ மாகாணத்தின், இரத்தினபுரி மாவட்டத்தில், அங்கம்மன பிரதேச செயலாளர் பிரிவில், அங்கம்மன கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அங்கம்மன ரஜமகா விகாரை வளாகத்திலுள்ள கண்டி காலத்துக்கு உரித்தான ஓவியங்கள், சிற்பங்களுடனான இரண்டு தேவாலயங்கள், கட்டாரம் முறையிலான கல்விகாரை.

04. சப்ரகமுவ மாகாணத்தின், இரத்தினபுரி மாவட்டத்தில், குருவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில், இல. 146பீ, பொதிமலுவ கிராம அலுவலர் பிரிவிற்குரிய நாமல்தெனிய கிராமத்தில் 369 ஆம் இலக்க இறுதிக் கிராம வரைபடத்திலுள்ள காணித்துண்டு துண்டு இல. 150 எனக் குறிப்பிடப்பட்ட ஹெரபொல மூக்கலான (நாமல்தெனிய) என அறியப்படும் காணியில் அமைந்துள்ள கட்டாரம் முறையிலான கற்குகை மற்றும் மலைக்குன்று அடிவாரத்தில் உள்ள 5 மீட்டர் சுற்றளவான பிரதேசம்.

05. சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 76, கொடபல கிராம அலுவலர் பிரிவிற்குரிய வட்டாரம கிராமத்தில் ஸ்ரீ அரஹத் மலியதேவ ரஜமகா விகாரையில் உள்ள பழைமையான கற்தூண்கள் உள்ளடங்கிய சிதைவுப் பாகங்கள், தூண் கல்வெட்டுக்கள், பழைய கட்டிட அடிப்பாகங்கள், பழைமையான வாசிகசாலை.

06. சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில், இல. 116ஏ, குருபெத்த கிராம அலுவலர் பிரிவிலுள்ள நிக்கவலமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள மேனுகொல்லவத்த என அறியப்படும் காணியிலுள்ள மண்ணாலான மயான ஓடம்.

07. சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில், ரங்கேகம கிராம அலுவலர் பிரிவிலுள்ள ரங்கேகம என்னும் கிராமத்திலுள்ள வுட்லண்ட் தோட்டத்தில் யோகம என்னும் தோட்டப் பிரிவில் 1988 ஆம் கூறு அமைந்துள்ள பகுதியில் காணப்படும் கட்டாரம் முறையிலான கற்குகை. (லக்மன கற்குகை)

08. சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், மாவனெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், கப்பாகொட கிராம அலுவலர் பிரிவிலுள்ள கப்பாகொட, பிரஹ்மவர்தனபாய ரஜமகா விகாரையில் உள்ள மலர் வழிபாட்டுத் தலம்.

09. சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில், இல. 120, ஹிங்குரலகந்த கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள திக்எல்ல கிராமத்தில் அமைந்துள்ள பேலிங்கல அல்லது ஹிங்குரலகந்த என அழைக்கப்படும் இடத்தில் காணப்படும் ஆரம்ப வரலாற்றுக் காலச் சான்றுகள் அடங்கிய கற்குகை. (வடக்கு அட்ச ரேகை 06º 91'7360" N கிழக்கு தீர்க்க ரேகை 080’ 30º 9614" E).

10. சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில், இல. 120, ஹிங்குரலகந்த கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள திக்எல்ல கிராமத்தில் அமைந்துள்ள ஹல்கஹதென்ன என அழைக்கப்படும் இடத்தில் காணப்படும் மஹலெனகல கற்குகை மற்றும் இயற்கை கற்குகைகள். (வடக்கு அட்ச ரேகை 06º 55'242" N கிழக்கு தீர்க்க ரேகை 80’ 18088" E).

11. சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில், இல. 120-ஏ, ஹிங்குரலகந்த மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள தங்கம்பல கிராமத்தில் அமைந்துள்ள ஹெட்டிகந்த என அழைக்கப்படும் இடத்தில் காணப்படும் ஆரம்ப வரலாற்றுக் காலச் சான்றுகள் அடங்கிய பம்பரகல கற்குகை. (வடக்கு அட்ச ரேகை 06º 922789" N கிழக்கு தீர்க்க ரேகை 080' 28' 6179" E).

12. சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், மாவனெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல.18ஏ கப்பாகொட கிராம அலுவலர் பிரிவிலுள்ள பதீதொர கிராமத்தில் அமைந்துள்ள சிறிசங்கபோ ஸ்ரீ புவனேகபா விகாரையில் உள்ள கட்டாரம் முறையிலான கற்குகை, செத்திய தூபி, கல்லின் மீது வெட்டப்பட்டுள்ள வடிகால், படிக்கட்டு மற்றும் பழைமையான பிக்குகள் தங்குமிடம். (வடக்கு அட்ச ரேகை 07' 135" N கிழக்கு தீர்க்க ரேகை 80' 2620" E).

13. சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், மாவனெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 27, அளுத்நுவர கிராம அலுவலர் பிரிவிலுள்ள அளுத்நுவர கிராமத்தில் அமைந்துள்ள கல்கே லென் விகாரை வளவில் உள்ள கட்டாரம் முறையிலான கற்குகை விகாரை.

14. சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், மாவனெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 25பீ, உடமாகடவர கிராம அலுவலர் பிரிவிலுள்ள உடமாகடவர கிராமத்தில் அமைந்துள்ள உடவத்த விகாரை அல்லது ஸ்ரீ ரேவத்த பிரிவெனா வளவில் உள்ள கட்டாரம் முறையிலான கற்குகை விகாரை.

15. சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், மாவனெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 25பீ, உடமாகடவர கிராம அலுவலர் பிரிவிலுள்ள உடமாகமவா கிராமத்தில் அமைந்துள்ள உடமாகடவர கொடவீபெல என அழைக்கப்படும் வளவில் உள்ள பழைமையான சத்திரம். (வடக்கு அட்ச ரேகை 7º 15' 17" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 28' 45" E).

**தென் மாகாணம்**

16. தென் மாகாணத்தின், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், தங்காலை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 264, பள்ளிக்குடா கிராம அலுவலர் பிரிவிலுள்ள பள்ளிக்குடா கிராமத்தில் அமைந்துள்ள மாளிகாதென்ன என அழைக்கப்படும் வளவில் உள்ள தொல்லியல் சான்றுகள் அடங்கிய மேடு. (வடக்கு அட்ச ரேகை 06º 01' 04.497" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 47'. 13.994" E).

17. தென் மாகாணத்தின், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அங்குணுகொலபெலெஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 195, கரகஹவெல கிராம அலுவலர் பிரிவிலுள்ள கரகஹவெல கிராமத்தில் அமைந்துள்ள வெஹெரகொடெல்ல என அழைக்கப்படும் வளவில் உள்ள புராதன தூபி மற்றும் கட்டிடச் சிதைவுகள். (வடக்கு அட்ச ரேகை 60º 12' 13.675" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 52' 39.337" E).

18. தென் மாகாணத்தின், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், தங்காலை பிரதேச செயலாளர் பிரிவில், நெட்டொல்பிட்டிய வடக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள நெட்டொல்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள வெஹெரகொடெல்ல என அழைக்கப்படும் வளவில் உள்ள பழைமையான தூபி மேடு. (வடக்கு அட்ச ரேகை 06º 04' 50.752" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 50' 55.209" E).

19. தென் மாகாணத்தின், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், ஒக்கேவெல பிரதேச செயலாளர் பிரிவில், மொதரவான தெற்கு மற்றும் மொதரவான வடக்கு கிராம அலுவலர் பிரிவுகளுக்குரிய மொதரவான கிராமத்தில் அமைந்துள்ள சீலவதி பர்வத விகாரை வளவில் உள்ள பன்னிரு மாத தீபத்தூண், குன்றுக் கல்வெட்டு மற்றும் அதனோடிணைந்த 4 மீட்டர் பிரதேசம், படிக்கட்டு மற்றும் அதனோடிணைந்த 6 மீட்டர் பிரதேசம். (வடக்கு அட்ச ரேகை 06º 08'. 23.7" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 42' 24.1" E).

20. தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில், திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 450பீ, பம்ரெந்த வடக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள குரும்புரே கிராமத்தில் அமைந்துள்ள பூர்வாராம ரஜமகா விகாரை வளவில் உள்ள சுவரோவியங்களுடனான சிலைக்கூடம்.

21. தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில், வெலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், 375 ஆம் இலக்க ஹல்லல கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஹல்லல கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ போதிருக்காராம விகாரை வளவில் உள்ள சுவரோவியங்களுடனான சிலைக்கூடம்.

22. தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில், கம்புறுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், தெனிபிட்டிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள தெனிபிட்டிய கிராமத்தில் பொல்அத்துமோதர வீதியில் 216 ஆம் வரிப்பண இலக்கத்தின் கீழ் 1908 ஆம் இலக்க மூலக்காணியின் 01 ஆம் இலக்க காணித்துண்டில் அமைந்துள்ள முல்லேகெவத்த என்னும் வளவில் உள்ள பழைமையான வீடு, அதனோடிணைந்த வடதிசை, தென் திசைகளில் 5 மீட்டர் நிலம், கிழக்குத் திசையில் 10 மீட்டர் நிலம், மேற்குத் திசையில் சுற்றுமதில் வரையான நிலம். (வடக்கு அட்ச ரேகை 5º 58' 35.0" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 27' 25.2" E).

23. தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில் கம்புறுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இஹல விட்டியல வடக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள இஹல விட்டியல வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள சபரலே ஸ்ரீ நிவாசாராம புராண விகாரையில் உள்ள தெளர்ணமி இல்லம் மற்றும் அதன் நாற்திசைகளிலும் முறையே 5 மீட்டர் வரையான நிலப்பகுதி. (வடக்கு அட்ச ரேகை 6º 03'. 32.7" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 32' 37.2" E).

24. தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில், கொட்டபொல பிரதேச செயலாளர் பிரிவில், கொட்டபொல தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள கொட்டபொல கிராமத்தில் அமைந்துள்ள கெட்டபரு ரஜமகா விகாரையில் உள்ள கட்டாரம் முறையிலான கற்குகை.

25. தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில், முலட்டியன பிரதேச செயலாளர் பிரிவில், இல. 273சீ, செட்டபலகந்த கிராம அலுவலர் பிரிவிலுள்ள இஹல கம்மெதகம கிராமத்தில் அமைந்துள்ள மீமன கல்கந்த ரஜமகா விகாரையில் உள்ள கட்டாரம் முறையிலான கற்குகை.

26. தென் மாகாணத்தின், காலி மாவட்டத்தில், கடவத்சத்தர பிரதேச செயலாளர் பிரிவில், இல. 99சீ, மாகால்ல கிராம அலுவலர் பிரிவிலுள்ள மாகால்ல கிராமத்தில் அமைந்துள்ள கச்சிவத்த புராண விகாரை வளவில் உள்ள பழைமையான சிலைக்கூடத்தின் சிற்பங்கள், சுவரோவியங்கள் மற்றும் பழைமையான சைத்திய விகாரை.

27. தென் மாகாணத்தின், காலி மாவட்டத்தில், ஹபராதுவ பிரதேச செயலாளர் பிரிவில், உணவட்டுன மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள உணவட்டுன கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் கோயில் கட்டிடம். (வடக்கு அட்ச ரேகை 6º 01'06" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 14'88" E).

**மத்திய மாகாணம்**

28. மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், உக்குவெல பிரதேச செயலாளர் பிரிவில், கலல்பிட்டிய கிராம அலுவலர் பிரிவுக்குரிய கலல்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள கலல்பிட்டிய புராண விகாரை வளவில் உள்ள சிலைக்கூடம் மற்றும் போதனா மண்டபத்தின் நடுப்பகுதி.

29. மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவில், பட்டகல்ல கிராம அலுவலர் பிரிவுக்குரிய ஹிப்பொல கிராமத்தில் அமைந்துள்ள வட்டகொட புராண விகாரை வளவில் உள்ள சிலைக்கூடம் மற்றும் போதனா மண்டபம். (வடக்கு அட்ச ரேகை 07º 14'55" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 41'56" E).

30. மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவில், பூட்டாவத்த தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்குரிய சாகம கிராமத்தில் அமைந்துள்ள சாகம ரஜமகா விகாரை வளவில் உள்ள பழைமையான இரண்டு சிலைக்கூடங்கள் மற்றும் பிக்கு வாசஸ்தலம்.

**மேல் மாகாணம்**

31. மேல் மாகாணத்தின், களுத்துறை மாவட்டத்தில், வளல்லாவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில், இல. 789, குலவிட்ட கிராம அலுவலர் பிரிவுக்குரிய குலவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள ஹல்வல என்னும் காட்டுப் பகுதியில் ஆரம்ப வரலாற்றுக் கால கற்குகைகள் மற்றும் அக்குன்றின் அடிவாரத்திலிருந்து நாற்திசையிலும் 100 மீட்டர் சுற்றளவான நிலப்பரப்பு. (வடக்கு அட்ச ரேகை 16º 25'23.5" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 09'37.9" E).

**ஊவா மாகாணம்**

32. ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில், லுணுகல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 18, மெட்டிகஹதென்ன கிராம அலுவலர் பிரிவுக்குரிய மெட்டிகஹதென்ன கிராமத்தில் அமைந்துள்ள சைலப்பியந்தராராம புராண விகாரையின் கற்குகையில் உள்ள கல்வெட்டுக்கள், மற்றும் கட்டாரம் முறையிலான கற்குகை. (வடக்கு அட்ச ரேகை 07º 04'38" N கிழக்கு தீர்க்க ரேகை 81º 09'09" E).

33. ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில், எல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 69டீ, தோவ கிராம அலுவலர் பிரிவுக்குரிய தோவ கிராமத்தில் அமைந்துள்ள தோவ ரஜமகா விகாரை வளவில் உள்ள கற்குன்றில் செதுக்கப் பட்டுள்ள சிலை மற்றும் பழைமையான தாதுகோபுரம். (வடக்கு அட்ச ரேகை 06º 51'21.4" N கிழக்கு தீர்க்க ரேகை 81º 01'19.7" E).

34. ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில், ஹாலிஎல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 76, போகொட கிராம அலுவலர் பிரிவுக்குரிய போகொட கிராமத்தில் அமைந்துள்ள போகொட ரஜமகா விகாரை வளவில் உள்ள பழைமையான மரப்பாலம். (வடக்கு அட்ச ரேகை 07º 00'29.7" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 59'46.8" E).

35. ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில், ஹல்தும்முல்ல பிரதேச செயலாளர் பிரிவில், கிரவனாகம கிராம அலுவலர் பிரிவிலுள்ள அம்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள போகஹவத்த வளவில் உள்ள பழைமையான பத்தினி தேவாலயம் மற்றும் சிதைவுப் பாகங்கள். (வடக்கு அட்ச ரேகை 6º 44'09.88" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 56'26.48" E).

36. ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில், அப்புத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், அப்புத்தளை கிராம அலுவலர் பிரிவிலுள்ள அப்புத்தளை கிராமத்தில் அமைந்துள்ள கதிர்காமத் தேவாலய வளவில் உள்ள பழைமையான தேவாலயக் கட்டிடம். (வடக்கு அட்ச ரேகை 6º 45'02.2" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 57'28.7" E).

37. ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில், வெலிமட பிரதேச செயலாளர் பிரிவில், கவரகம்மான கிராம அலுவலர் பிரிவிலுள்ள கவரகம்மான கிராமத்தில் அமைந்துள்ள விதுருபொல ஸ்ரீ பியதிஸ்ஸ பிரிவெனா வளவில் உள்ள வில்சன் பங்களா எனப்படும் பழைமையான கட்டிடம். (வடக்கு அட்ச ரேகை 06º 54'01.66" N கிழக்கு தீர்க்க ரேகை 80º 51'47.84" E)

EOG 06 - 0006